THIRU R. PONNAPPA NADAR : Sir, may I know from the Hon. Minister whether it would not be proper to release all the prisoners who had been convicted previous to the repealing of the prohibition Act in the State?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, மதுவிலக்கு ரத்தான வுடன் மது குடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் மது காய்ச்ச சட்டவிரோதமாக அனுமதிக்கப்படவில்லை. குடித்தவர்கள், மது வாங்கியவர் கள், குடிபோதையில் இருந்தவர்கள் இவர்களைமட்டும் விடுதலை செய்யலாம். மற்ற குற்றங்களைச் செய்தவர்கள் விடுதலை செய்யப்படவேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் முடிவெடுத்திருக்கிறது.

வாலாஜாப்பேட்டையில் இரசாயனப் பொருள் உற்பத்தி ஆலை

*18 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம், வாலாஜாப்பேட்டையில் சோடியம் டை கார்பனேட் என்ற இரசாயனப் பொருள் ஆலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மொத்த முதலீடு எவ்வளவு? அது எப்போது செயல்படத் தொடங்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) சோடியம் டை குரோமைட் தயாரிப்பதற்கான ஆலை ஒன்று வட ஆற்காடு ஜில்லாவில் வாலாஜாப்பேட்டை யில் நிறுவப்பட்டு வருகிறது.

(இ) இத்திட்டத்தினால் அரசுக்குண்டான மீளாச்செலவு (Non-Recurring expenditure) ரூ. 4,65,000 நடைமுறைச் செலவு ஆண்டுக்கு ரூ. 2,90,000. இந்த ஆலை 1971 முடிவுக்குள் செயல்படத் தொடங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஆலையில் இப்பொழுது அமைக்கப்பட்டிருக்கின்ற இயந்திரங்கள் பழுதடைந்திருப்பதால் ஒரு ஆண்டுக் காலமாகத் துவக்கப்படவில்லையென்றும், அதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்த, அந்த காண்டிராக்டர்கள் பணத்தை முன்னாலேயே பெற்று விட்டதால் ரிப்பேர் செய்து கொடுக்காத நிலை இருப்பதாகச் சொல்லப்படுவது உண்மையா? உடனடியாக அவைகளைப் பழுதுபார்த்து அவைகள் இயக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இருபற்றி அங்கத்தினர் கூறிய கருத்து ஏற்கனவே பரிசீலிக்கப்பட்டது. அப்படி எதுவும் நடைபெறவில்லை என்று அரசாங்கத்திற்குத் தகவல் கிடைத்திருக்கிறது. ஏற்கனவே அவர்கள் இயந்திரங்களெல்லாம் அமைத்து அதற்கு 100-க்கு 90 சதவிகிதம் முன் பண மாகத் தர வேண்டுமென்று கேட்கிறார்கள். இயக்குநரின் சிபாரிசு அரசாங்கத் திற்குக் கிடைத்திருக்கிறது. அதை 'டிரெயில்' செய்யும்பொழுது 'டீத்தின் டிரபிள்' எப்பொழுதும் தொழிற்சாலையில் வரும், அது வந்து இருக்கிறது. இன்னும் சில நாட்களுக்குள் சரிப்பட்டு உற்பத்தி தொடங்கும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.